# கொலைப் பயமுறுத்தலுடன் மர்ம சுவரொட்டிகள் !

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 16 இதழ் 264
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 1 — 11 — 1992

## நுவரெலியாவில் எதிர்ப்பு

(நுவரேலியா) நுவரெலியாவில் மர்மமான முறையில் ஒட்டப்பட்டுள்ள போஸ்டர்களுக்கு எதிராக ஒரு ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று இடம்பெற இருக்கிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

## அரசு அதிகாரிகள் மீது லஞ்ச விசாரணை

(கொழும்பு) பொலிஸ் அதிகாரிகள், கிராமசேவை அலுவலர்கள், நீதிசேவை உத்தியோகத்தர் ஆகியோர் லஞ்ச திணைக்களத்தினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதாக லஞ்ச திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கிராமசேவை அலுவலருக்கு எதிராக 247 முறைப்

(4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவ தேவையை நீக்குவது கடினம்

(கொழும்பு) இராணுவத்தில் தற்போது ஏற்பட்டுள்ள ஒரு தேவை நிலையை உடனடியாக நீக்குவது கடினமென கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்கள் மீது படுகொலை
# வெளிநாட்டு பத்திரிகைகள்
# இலங்கைக்கு எதிராக பிரசாரம்

## 3 அமைச்சர்கள் சீற்றம்

(கொழும்பு)

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக அரச படைகள் மேற்கொண்டுவரும் தாக்குதல்களை கண்டித்து வெளிநாட்டு பத்திரிகைகள் பல செய்திகளும், கட்டுரைகளும் புகைப்படங்களுடன் வெளியிட்டு வருகின்றன. இதற்கு இலங்கை அமைச்சர்கள் மூவர் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளனர்.

...போது வெளிநாட்டில் ...பயணம் மேற்கொண் ...வர்த்தக வாணிபத் ...அமைச்சர் ஏ. ...ன்சூர், தகவல் தொ... ராஜாங்க அமைச்சர் ...ஏ ஜே ரணசிங்க மற்று ...மொரு அமைச்சர் இக் கண்டனங்களை மத்திய கிழக்கு நாடொன்றில் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் கூறுகையில், விடுதலைப் புலிகளுக்கும் அரச துருப்புகளுக்கும் இடை...யில் வடக்கு-கிழக்கில் நடை...

(4ம் பக்கம் பார்க்க)

## கடந்த மாதமே புலிகள் வரலாற்றில் அதிகளவு ஆயுதங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்) தமிழீழப் புலிகளின் போராட்ட வரலாற்றில் என்றுமில்லாத அளவு மிக அதிக எண்ணிக்கையிலான ஆயுதங்கள் அக்டோபர் மாதத்தில் கைப்பற்றப்பட்டன.

கடந்த மாதம் 1ம் திகதி முதல் நேற்று வரையான காலப்பகுதியில் தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள இராணுவ காவல் அரண்கள் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய 10 தாக்குதலின் போது ஒரு ஐம்பது கலிபர் துப்பாக்கி, இரண்டு ஆர். பி. ஜி. க்கள் 9 ஏ. கே. ...லகு இயந்திரத் துப்பாக்கிகள், ஒரு ஜி. பி என் பி. இரண்டு அறுபது மில்லிமீட்டர் மோட்...

(4-ம் பக்கம் பார்க்க)

## இயங்க முடியாத நிலையில் இரு பொம்மர்கள் முடக்கம்

(கொழும்பு) இலங்கை விமானப்படையில் உள்ள குண்டுவீச்சு விமானங்களில் இரு பொம்மர்கள் தற்போது விமானப் படை... இயங்க முடியாத நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. ...யிடம் எட்டு வரையிலான ...இத்தாலி மாசெட்டி பொம்...

(4ம் பக்கம் பார்க்க)

## தப்பியோடிய படையினரை தேடிப்பிடிக்க புதியகுழு

(கொழும்பு) இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களை தேடிப்பிடிக்கும் முயற்சிக்கென புதிய குழுவொன்று இராணுவத்தில அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கென பிரிகேடியர் ஒருவர் தலைமையில் ஐவரடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு தப்பி...

(4-ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு நிலைபற்றி ஆராய ஒவ்வொரு வாரமும் மாநாடு

(கொழும்பு) ...க்கு-கிழக்கு பாதுகாப்பு ...குறித்து இனிமேல் ஒவ்வொரு வாரமும் பாதுகாப்பு உயர்நிலை மாநாடு நடைபெறவுள்ளதாக கூட்டுப் படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

வடக்கு—கிழக்கில் பாதுகாப்பு நிலை மோசமடைந்து வருவதையடுத்தே ஒவ்வொரு வாரமும் இந்த மாநாட்டை நடத்துமாறு படைத் தளபதிகள் பணிக்கப்பட்டுள்ளனராம்.

இதேவேளை பாதுகாப்பு நிலை குறித்து அவசர முடிவு

(4-ம் பக்கம் பார்க்க)

## ...ண்டைதீவு கடலில் ...பீரங்கி படகுகள்

(அரியாலை) ...யாழ். குடா கடற்பிராந்தியத்தில் கல்முனை, மண்டைதீவுப் பகுதியில் பாசையூருக்கு நேரே பெரிய பீரங்கிக் கப்பல் ஒன்றும், இன்னுமொரு சிறிய பீரங்கிக் கப்பலும் நிலைகொண்டுள்ளன.

கடந்த 30-ம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு வந்துள்ள இக்கப்பல்களை பாஷையூர் மக்கள் திரளாக நின்று பார்த்தனர். வடபகுதியில் பாரிய தாக்குதல் நடவடிக்கைக்கு முன்னோடியாக வந்துள்ளதாகவும் இக்கப்பல்கள் வருகையால் கரையோரப்பகுதி மக்கள் அச்சத்துடன் இருப்பதாக அறியப்படுகின்றது. 59)

## மணலாறு பகுதிக்கு படைத்தளபதிகள் விஜயம்

(கொழும்பு) மணலாறு பகுதிக்கு நேற்று முன்தினம் கூட்டுப்படைத் தலைமைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்யரத்ன மற்றும் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் நேற்றுமுன்தினம் திடீர் விஜயமொன்றை மேற்

4-ம் பக்கம் பார்க்க)

## கொலை - ஆட்கடத்தல் - சித்திரவதை அமெரிக்க காங்கிரஸ் சபையில் இலங்கை மீது கண்டனம்

(வாஷிங்டன்) இலங்கையில் அரசபடைகளினால் பெருமளவு படுகொலைகளும், கைதுசெய்யப்பட்ட ஆயிரக்கணக்கானோர் காணமற்போன சம்பவங்களும், படைமுகாம்களில் மோசமான சித்திரவதைகளும் இடம்பெற்றுள்ளதாக அமெரிக்க காங்கிரஸ் சபையின் பிரதிநிதிகள் இருவர் கூறியுள்ளனர்.

குடியரசுக் கட்சியைச் சேர்ந்த திரு. டபிள்யு. எஸ். புறாம்பீல்ட் என்பவரும், ஜனநாயக கட்சியைச் சேர்ந்த திரு சாள்ஸ் வில்சன் என்பவருமே இவ்வாறு காங்கிரஸ் சபையில் கூறியுள்ளனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்: ஜே.வி பிக்கு எதிரான

( 4ம் பக்கம் பார்க்க)

## சூரன் போரில் தாலிக்கொடி அபகரிப்பு

(பண்டத்தரிப்பு) நேற்று பிற்பகல் நல்லூர் கந்தசுவாமி கோவிலில் நடைபெற்ற 'சூரன் போர்' உற்சவத்தின் போது உள் வீதியில் வைத்து பெண்மணி ஒருவரின் தாலிக்கொடி அபகரிக்கப்பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

நாட்டில் வனத்தைக் காத்து
நாட்டின் வளத்தைக் காப்போம்

## வரி விளம்பரம்

### நோவு வைத்தியம்

ஒட்டகபுலம் சமதிதர் நோவு எண்ணெ கிடைக்குமிடம் எஸ் ரி. மெடிக்கல்ஸ். 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6888)

### யாழ். பழைய புத்தகக்கடை

சகலவிதமான அரும் பெரும் பழைய புத்தகங்கள், கொப்பிகள், பேப்பர்கள் யாவும் வாங்கவும் விற்கவும் சிறந்த இடம் யாழ். பழைய புத்தகக்கடை அர்ச்சுன வீதி, (ஸ்ரான்லி) யாழ்ப்பாணம். (சி-6898)

### விற்பனையாகின்றது

சித்திரம்-ஆண்டு II. சைவநெறி ஆண்டு 10, 11 கந்தன் புகழ் ஷஷ்டி கவசம் ஆறுபடை வீடு, இவை யாவற்றிற்கும் வியாபாரிகளுக்குத் தகுந்த கழிவு வழங்கப்படும். ஒவ்செட் படத்துடனான கலண்டர்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும், விலாசம் பதிப்பித்தும் பெற்றுக்கொள்ளலாம். ஸ்ரீகாந்தா அச்சகம், புத்தகசாலை. (ஏ-2542)

### அனுமதிப் பரீட்சை ஆண்டு—6

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு 6 மாதிரி அனுமதித் தேர்வு 1-11-92 ஞாயிறு மு. ப. 8-00, மு. ப. 10-00 நேரங்களில் நடைபெறும். மாதிரி வகுப்புகளும் செவ், வியா, சனி, ஞாயிறு (தமிழ், கணிதம்) நடைபெறுகின்றன. எமது நிறுவனத்தால் வெளியிடப்பட்ட இப் பரீட்சைக்கேற்ற துரித மீட்டற் பயிற்சி (விடைகளுடன்) பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-6938)

### மணமகன் தேவை

நற்பண்பும் நல்லொழுக்கமுமுள்ள அரச கூட்டுத்தாபனத்தில் கணக்காளராக கடமையாற்றும் 45 வயது பெண்ணுக்கு மணமகன் தேவை. வீடு, வளவு கொடுக்கப்படும். நேரில் தொடர்புகொள்ளவும். க. செல்வரத்தினம், 248ம் கட்டை புகையிரதப் பாதை கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (சி- 6943)

கட்டாக்காலி

## நாய்களைப் பிடிக்க ஏற்பாடு

(அரியாலை)

யாழ். நகரில் தற்பொழுது யாழ். மாநகரசபை ஊழியர்களால் வீதிகளில் கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்களைப் பிடிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (59)

போலிப்

## பத்திரங்கள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

போலி அடையாள அட்டைகளைப் பயன்படுத்துவோருக்கு எதிராக ஆட்பதிவுத் திணைக்களம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

இப்போது போலி பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களும் அடையாள அட்டைகளும் சர்வசாதாரணமாக நாட்டில் புழங்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

சராசரி ஒவ்வொரு மாதமும் 30 முதல் 40 போலி பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன என்று ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் பந்துல குலதுங்க தெரிவித்தார். (சு)


## அனித்தா பயிற்சி நிலையம்

★ Sugar Craft
★ Bridal Makeup
★ Cookery
★ Hair Style
★ Facial
★ Needle Work
★ Cake Icing
★ Flower Making

வகுப்புக்கள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன

அனித்தா பயிற்சி நிலையம்
பூநாறி மரத்தடி, கே. கே. எஸ். வீதி,
கொக்குவில். (ஏ 2538)



## மிற்சுபிஷியில் சலுகைகள்

மிற்சுபிஷி படச்சுருள்களை கொழும்பு பிரதியாக்கலிற்கு எம்மிடம் தருவதன் மூலம் இரண்டு வகையான விசேட "தள்ளுபடி விலை" சலுகைகளை பெற்றுக் கொள்ளுங்கள்
விபரங்கள் நேரில்

கலக்சி
புகைப்பட சேவை
1ம் மாடி
337 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (ஏ-2550)


### கொட்டகைகள் அமைக்க அனுமதி வேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குள் தற்காலிக கொட்டகைகள் அமைக்க விரும்புவோர் மாநகரசபை திட்டமிடல் பிரிவில் அனுமதி பெறவேண்டும் என்று மாநகரசபை ஆணையாளர் வே பொ. பாலசிங்கம் கேட்டுள்ளார்.

ஏற்கனவே தற்காலிககொட்டகை அமைப்புக்களை நிறுவியவர்களும், மாநகரசபை எல்லைக்குள் இருக்கும் காணிகளுக்குள் மண் போடுபவர்களும் அங்கீகாரம் பெறவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.


## பனை அபிவிருத்திச் சபை

யாழ். மாநகர எல்லைக்குள்

## பனை நடுகைத் திட்டம்

★ அருகிவரும் 'கற்பகச்' செல்வத்தைச் காப்போம்.
★ எதிர்காலச் சந்ததியின் ஆரோக்கியத்துக்கு உதவுவோம்.
★ நகரத்தின் சுற்றுப்புறச் சூழலைப் பேணுவோம்.

எம்மண்ணை வளம்படுத்த
ஒரு லட்சம் பனம் விதைகளை
நடும் இத்திட்டத்தில்
நகர மக்கள் ஒவ்வொருவரும்
இணைந்து கொள்ளுங்கள்

பனம் விதை ஒன்று 40 சதத்திற்கு கொள்வனவு செய்யப்படும்

### இலவசம்


★ பனம் விதைகள்
★ ஆலோசனைகள்
★ அழகிய வழிகாட்டி

ஆர்வமுள்ளோர் உடன் தொடர்புகொள்ளவும்:-
பனை அபிவிருத்திச் சபை
தேசிய வீடமைப்புச் செயலகம்
யாழ்ப்பாணம்.

மர நடுகை வாரத்தைச்
சிறப்படையச் செய்வோம்

(ஏ-2546)


## நன்றி நவிலலும் 45வது நாள் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் வை. இரத்தினசபாபதி

மலர்வு: 10-11-1941    உதிர்வு: 18-09-1992

**அந்தியேட்டி: 02-11-1992**


18-09-92 அன்று அகால மரணமடைந்த எனது தந்தையின் ஈமக்கிரியைகளில் பங்குகொண்டு, கண்ணீர் அஞ்சலி செலுத்தி, எனக்கு ஆறுதலளித்த என் சக தோழர்களுக்கும் (ஆண்டு-10 A மாணவர்கள், யாழ். இந்துக் கல்லூரி), இந்துக் கல்லூரியின் ஏனையோருக்கும், என் தந்தையின் மரண நிகழ்வில் பங்கு கொண்ட விடுதலைப் புலிகளுக்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் நன்றி நவிலுகின்றேன்.

02-11-1992ம் திகதி திங்கட்கிழமை நடைபெற இருக்கும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும் பங்குகொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றேன்.

அமரத்துவமடைந்த இரத்தினசபாபதியின்
ஏக புதல்வன் இ. வைத்திலிங்கம்,
(மாணவன் 10 A, யாழ். இந்துக் கல்லூரி).

பத்திரகாளி கோவிலடி,
சுழிபுரம். (சி 6940)

## ஓர் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் ஆறுமுகம் சபாரட்னம்

மலர்வு: 08-04-1963    உதிர்வு: 13-11-1991
திதி 01-11-1992

உருண்டு ஓடியதா ஓர் ஆண்டு
அமைதி இழந்தோம் நாம் எல்லோரும்
சாரிருள் படிந்தது நம் வாழ்வில்
பெற்றோரை காப்பாற்ற சிறு வயதில் பாடுபட்டீர்
பலன் அடையும் வேளையில் பகல் நிலவானது
நம் வாழ்வு
உந்தன் மணவாழ்வை மகிழ்வுடன் காணத்
துடித்தோம்
சவூதியில் வாகன வடிவில் வந்த காலன் உன்னை
அழைத்துச் சென்றான்
இப்புவியில் நாம் அலறும் ஒலி கேட்கவில்லையா
சபா

எம் கண்ணீர் பூக்களை உம் காலடியில்
காணிக்கையாய் சமர்ப்பிக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!

ஐயா, அம்மா, அண்ணன்மார்,
அக்கா, அண்ணிமார், அத்தான்,
பெருமக்கள், மருமக்கள்.

சுழிபுரம் மேற்கு, சுழிபுரம். (சி-6932)

# சர்வதேச கடத்தல் மன்னர்கள் இலங்கைக்குள் ஊடுருவல்?

## இன்ரர்போல் எச்சரிக்கை

(கொழும்பு)

சர்வதேச போதைவஸ்து கடத்தலில் பிரசித்திபெற்ற 16 பேர் இலங்கைக்குள் வந்திருக்கக்கூடுமென இன்ரர்போல் பொலிசார் இலங்கையை எச்சரித்துள்ளனர்.

இவர்களில் 10 பேர் இத்தாலியர், இருவர் ஸ்பானியர், இருவர் இந்தியர், இருவர் போர்த்துக்கல் நாட்டவர்.

இவர்கள் அனைவரும் ஒன்றுகூடி திட்டங்களைத் தயாரிக்கவே இலங்கைக்குள் உல்லாசப் பயணிகள் வேடத்தில் பிரவேசிக்கக்கூடுமென இன்ரர்போல் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி நபர்கள் பற்றிய விபரங்கள் தெரிந்தால் உடனடியாக தமக்குத் தகவல் தரும்படி பொலிஸ் தலைமைச் செயலகம் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (வி)

## ராஜீவ் கொலை வழக்கு விசாரணை அடுத்த மாதம் ஆரம்பம்

(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைவழக்கு விசாரணை அடுத்த மாதம் ஆரம்பமாகுமென விசேட விசாரணைக்குழுத் தலைவர் காங்கேயன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ராஜீவ் கொலைவழக்கு விசாரணை நடைபெறவிருக்கும் பூந்தமல்லி சிறைச்சாலையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் விரைவில் பூர்த்தியாகி தயார்நிலையில் இருக்கும் என்றும் இவ்வழக்கு விசாரணை ஒரு வருடத்தில் முடிவடையும்.

ராஜீவ் கொலையில் சில அரசியல் கட்சிகளுக்கு தொடர்பு இருக்கிறதா என நிருபர்கள் கேட்டதற்கு பொறுத்திருந்து பாருங்கள் என அவர் பதிலளித்தார். (க)

## கொழும்பு — மட்டக்களப்பு ரயில்சேவை இன்று மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்பு — மட்டக்களப்பு ரயில்சேவை இன்று முதலாம் திகதியிலிருந்து மீண்டும் ஆரம்பிக்கப்படவிருப்பதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

மேற்படி சேவை தற்போது பொலநறுவைவரை மாத்திரமே நடைபெறுகிறது. இன்று முதல் இந்தச் சேவை வாழைச்சேனைவரை நீடிக்கப்படும். நாளை இரண்டாம் திகதி முதல் இந்தச்சேவை மட்டக்களப்புவரை விஸ்தரிக்கப்படுமெனவும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

## ஆசிரியர் மறியல் போராட்டம்

(சென்னை)

சென்னையில் இடைநிலைக் கல்வி ஆசிரிய இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழுவினால் ஒன்பது அம்சக் கோரிக்கையை வலியுறுத்தி ஆசிரியர்கள் மறியல் போராட்டம் ஒன்றை நடாத்தினர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட பல ஆசிரியர்கள் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது. (சு)

## கிழக்கு பாதுகாப்பு; ஜனாதிபதிக்கு அறிக்கை

(கொழும்பு)

கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பாதுகாப்பு தொடர்பாகவும் ஏனைய பல கோரிக்கைகள் தொடர்பாகவும் மட்டக்களப்பு முன்னாள் எம். பி. ரிஸ்வி சின்னலெப்பை தயாரித்துள்ள அறிக்கை ஒன்று வெகுவிரைவில் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிடம் கையளிக்கப்படவுள்ளது.

இதுகுறித்து ஸ்ரீலங்கா மக்கள் காங்கிரஸ் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

சுயாதீனமான முஸ்லிம் படைப்பிரிவு ஒன்றை அமைப்பதற்குப் பதிலாக நிரந்தர இராணுவத்தில் முஸ்லிம் இளைஞர்களை சேர்க்க வேண்டுமென மக்கள் காங்கிரஸ் தலைவர் ஏ. எஸ் ஜி அமீர் அண்மையில் தெரிவித்த யோசனைகளை முஸ்லிம் காங்கிரஸ் ஏற்றுக் கொண்டிருப்பதை அறிந்து நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

## நிர்வாக சேவைக்கு போட்டிப் பரீட்சை

(கொழும்பு)

இலங்கை நிர்வாகசபைக்கு மேலும் ஒரு தொகுதியினரை சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் டிசம்பர் மாதம் அளவில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டுப்படுத்தப்பட்ட இப்பரீட்சைக்கு அரசாங்கசேவையில் சம்பந்தப்பட்ட தரங்களில் 10 வருடங்களைப்பூர்த்தி செய்துள்ள நிரந்தர ஊழியர்கள் தோற்றலாம் என்றும் 22—30 வயதிற்கு இடைப்பட்ட வயதினை உடைய பட்டதாரிகளும் மேற்படி சிறப்பு பரீட்சைக்குத் தோற்ற முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் 13ம் திகதிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும் என்றும் இதுசம்பந்தமான விபரங்கள் இம்மாதம் 13ம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## பென்சன் வவுச்சர்

(மானிப்பாய்)

மலேஷியா, சிங்கப்பூர், பர்மா ஓய்வூதியம் பெறுபவர்களின் ஒக்டோபர் மாதத்துக்குரிய பென்சன் வவுச்சர்களும் காசோலைகளும் நேற்று முன்தினம் யாழ் செயலகத்திலிருந்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் அந்தந்த வங்கிகளில் இவற்றைப் பெற்றுக்கொள்ளலாமெனத் தெரிவிக்கப்படுகிறது. (71)

## இராசி பலன்

01-11-992

ஞாயிற்றுக்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி 16)

ஸப்தமி பி. இ. 3-22வரை. உத்தராடம் பி இ. 3-53 வரை. இராகுகாலம் மாலை 4-34 முதல் 6-04 வரை. சுப நேரம் காலை 9-04 முதல் 10-34 வரை. அமிர்தயோகம்.

மேடம்- வாக்கு வசீகரம், பணவரவு, பாராட்டு.

இடபம்- சோம்பல், அதிகாரிகள் சினம், காரியதடை.

மிதுனம்- மனச்சஞ்சலம், தீயோர் நட்பு, யோசனை.

கடகம்- நண்பருதவி, மனைச் சிறப்பு, பயணம்.

சிங்கம்- பெரியவர் ஆசி, தானதர்மம், தொழில்சிறப்பு.

கன்னி- புத்தி தடுமாற்றம், தப்பபிப்பிராயம், கூடல்நிலை பாதிப்பு.

துலாம்- மனைவியால் துயர், குடும்ப கவலை, பணமுடை.

விருச்சிகம்- எதிர்பார்த்த செய்தி, சுபகாரியம், தற்பெருமை.

தனுசு- இயலாமை, கற்பனையான பயம், அலைச்சல்.

மகரம்- கூட்டு முயற்சி, குடும்ப சுகம், காரியசித்தி.

கும்பம்- மயக்கநிலை, வேண்டாத உறவு, துயரம்.

மீனம்- புதிய வாய்ப்பு, இல்லத்தில் மகிழ்ச்சி, புத்திரர் பெருமை.

— ஜோஸ்பர்

## 'கறுப்பு வெள்ளி' கலவரம் தொலைக்காட்சியில் பார்த்து அமைச்சர் அதிர்ச்சி

(கொழும்பு)

'கறுப்பு வெள்ளி' தினத்தன்று கொழும்பில் நடந்தசம்பவங்களை வர்த்தக வாணிபத் துறை அமைச்சர் ஜனாப் ஏ. ஆர். எம். மன்சூர் தாம் தொலைக்காட்சியில் பார்த்து அதிர்ச்சியடைந்ததாகத் தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளில் பத்து நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த அமைச்சர் கறுப்பு வெள்ளி தினத்தன்று தாம் கட்டாரில் இருந்ததாகவும் அன்று கட்டார் தொலைக்காட்சியில் அந்தச்சம்பவங்களை பார்த்து அதிர்ச்சியும் கவலையும் அடைந்ததாகவும் கூறியுள்ளார்.

''எனது மத்தியகிழக்கு விஜயத்தின்போது வைபவம் ஒன்றில் பேசிக்கொண்டிருந்தேன் அப்போது ஒரு பத்திரிகையாளர் என்னிடம் உங்கள் பொருள்களைக் கொள்வனவு செய்யும்படி கூறுகிறீர்கள். ஆனால் உங்கள் கொழும்பில் என்ன நடக்கிறது'' என்பது பற்றி உங்களுக்குத்தெரியுமா? என்று கேட்டதாகவும் அமைச்சர் மன்சூர் குறிப்பிட்டுள்ளார்.

## கலைப்பீட மாணவர் வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களுக்கான வரவேற்பு நவம்பர் 2-ம் திகதி யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. (159)

## தீப்பெட்டிக்கு தட்டுப்பாடு

(கொழும்புத்துறை)

யாழ். குடாநாட்டில் தற்போது தீப்பெட்டிக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தீப்பெட்டியின் விலை குடாநாட்டில் அதிகரித்துள்ளது.

சில இடங்களில் தீப்பெட்டி ஒன்று எட்டுரூபா முதல் பத்து ரூபா வரை விற்பனையாகிறது. (154)


யா/வட்டு. இந்துக் கல்லூரி. சித்தங்கேணி

1993 ஆண்டு 6 அனுமதித் தேர்வு

1. மேற்படி பரீட்சை நடைபெறும் திகதி 14-11-92 சனிக்கிழமை.
2. பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 04-11-1992 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

அதிபர்.

(எ-2455)



நாடகப் பயிலகம்
SCHOOL OF DRAMA

திருமறைக் கலாமன்றத்தின் நாடகப் பயிலகத்தில் பயிற்சிபெற விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| பயிற்சிக் காலம்: | ஆறு மாதம் |
| வகுப்புகள்: | வார நாட்களில் மாலை 5 6-30 வரை |
| விண்ணப்ப முடிவு: | 15 - 11 - 1992 |
| வயது: | 15க்கு மேற்பட்டோர் |
| பால்: | ஆண், பெண் இருபாலாரும் |

விண்ணப்பப்படிவங்களையும், மேலதிக விபரங்களையும் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

C. M. நெல்சன்,
செயலாளர்.
திருமறைக் கலாமன்றம்

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(ஏ-2454)



யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
கட்டிடப் பொருட்களுக்கான
கூறுவிலை அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகரசபையினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைகளுக்குத் தேவையான கட்டிடப் பொருட்களான பலகைகள், தீராந்திகள், றீப்பைகள், ஓடுகள், கண்ணாடித் தகடுகள் ஆகியவற்றை விநியோகிப்பதற்கான கூறுவிலைகள் எதிர்வரும் 10-11-92 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 03-00 மணிவரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கூறுவிலைப்படிவங்களையும்' ஏனைய விபரங்களையும் 06-11-92ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரையும் மராமத்துப் பொறியியலாளரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்.
யாழ்ப்பாணம்.
26-10-1992

(சி-2551)



முதலாவது
பிறந்ததின வாழ்த்து
செல்வி மிருத்திகா யுதர்சிகா

புளியங்கூடல் தெற்கைச் சேர்ந்த யுவராசா கலைமகள் தம்பதிகளின் செல்வப் புதல்வி மிருத்திகா யுதர்சிகா தனது முதலாவது பிறந்த தினத்தை, 01-11-92ல் (ஞாயிற்றுக்கிழமை) இல 118, பலாலி வீதி, கோண்டாவில் இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை, அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, அன்பு அக்கா யுதர்சினி, அன்பு அண்ணா யுதர்சன், சிறிய தாயின் பிள்ளைகள், அன்பு மசூரா அக்கா, பயாழ் அக்கா, வவுனியாவில் இருக்கும் பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அம்பாளின் அருள் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

அம்பாள் உணவகம்
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
(சி 6941)

# 5000 இளைஞரை சேர்க்குமாறு முஸ்லிம் காங்கிரசுக்கு சவால்

## மக்கள் காங்கிரஸ் விடுத்தது

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு ஸ்ரீலங்கா மக்கள் காங்கிரஸ் சவால் விட்டிருக்கிறது.

சுயாதீனமான முஸ்லிம் படைப் பிரிவில் சேருவதற்கு பத்தாயிரம் முஸ்லிம்கள் தயாராக இருப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏற்கனவே தெரிவித்திருந்தது.

எனினும் நிரந்தர ஆயுதப் படையில் சேர்த்துக்கொள்வதற்கு முடிந்தால் ஐயாயிரம் இளைஞர்களைச் சேர்த்துத் தருமாறு ஸ்ரீலங்கா மக்கள் காங்கிரஸ் பதிலடியாக ஒரு சவால் விட்டிருக்கிறது.

இதேவேளை முஸ்லிம்காங்கிரஸ் இனவாத ரீதியில் செயல்படுவதால் முஸ்லிம் இனத்தின் எதிர்காலம் பாதிக்கப்படலாமென பல முஸ்லிம் தலைவர்கள் தெரிவித்துள்ளதும் தெரிந்ததே.

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் புஷ் - கிளிங்ரனுக்கிடையில் கடும் போட்டி

(நியுயோர்க்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷிற்கும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் பில்கிளிங்ரனுக்கும் இடையில் கடும் போட்டி நிலவுவதாகவும் இருவரும் கருத்துக் கணிப்பில் சமநிலையில் உள்ளதாகவும் இறுதிக் கணிப்பீடுகள் தெரிவித்துள்ளன.

இருவாரங்களுக்கு முன் நடைபெற்ற கருத்துக் கணிப்பில் கிளிங்ரன் ஜோர்ஜ் புஷ்ஷைவிட 15 வீத புள்ளிகளில் முன்னணி வகித்தது தெரிந்ததே

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. (க)

# ★ துப்பாக்கி சூடு நடத்தி 26 இலங்கை மீனவர்களை இந்திய கடற்படை பிடித்தது

(சென்னை)

தூத்துக்குடியைத் தளமாகக் கொண்டு செயல்படும் கடலோரக் காவல்படையினர் கடந்த வியாழக்கிழமை கன்னியாகுமரி அருகே ஐந்து இலங்கை மீன்பிடிப் படகுகளையும், 26 இலங்கை மீனவர்களையும் பிடித்தனர்.

இந்த மீனவர்கள் கடலோரக் காவல்படையினர் விடுத்த எச்சரிக்கை சமிக்ஞைகளைப் புறக்கணித்தபோது அந்தப் படகுகளை நோக்கி கடலோரக் காவல்படையினர் துப்பாக்கியால் சுட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இலங்கை மீனவர்களிடம் தக்க ஆவணங்கள் எதுவும் இல்லாததால் அவர்கள் கைதுசெய்யப்பட்டு கன்னியாகுமரி காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களிடமிருந்து நாலாயிரம் லீட்டர் டீசலும் சுமார் நான்கரை டன் மீன்களும் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பஞ்சாப், ஜம்மு காஷ்மீரில் 42 இந்துக்கள் கொலை

(புதுடில்லி)

இந்தியாவின் பஞ்சாப்பிலும் ஜம்மு காஷ்மீரிலும் தீவிரவாதிகள் மேற்கொண்ட இருவேறு தாக்குதலில் 42 இந்துக்கள் உயிரிழந்தனர். 30 பேர் படுகாயமடைந்தனர்.

பஞ்சாப்பில் லூதியானா மாவட்டத்தில் சந்தை ஒன்றில் சீக்கிய தீவிரவாதிகள் கண்டபடி சுட்டதில் 19 இந்துக்கள் உயிரிழந்ததாகவும் மற்றோர் இடத்தில் 8 இந்துக்கள் சுட்டுக்ககொலைப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஜம்மு – காஷ்மீரில் இந்துக்கள் சென்ற பஸ்வண்டி ஒன்றில் குண்டு ஒன்று வெடித்ததில் 15 பேர் கொல்லப்பட்டனர். (சி)

## மீனவர்களை விடுவிக்குமாறு இலங்கை கோரிக்கை

(கொழும்பு)

இந்திய கடற்படையினரால் கன்னியாகுமரிக் கடற்பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்ட 5 படகுகளையும், 26 மீனவர்களையும் விடுவிக்குமாறு இலங்கை அரசு இந்தியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தக் கோரிக்கையை இலங்கை வெளியுறவு அமைச்சு நேற்று விடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது

தற்போது இவர்களை விடுவிக்கும் முயற்சிகளில் சென்னையிலுள்ள இலங்கை துணைத் தூதரகம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறதாம். (சி)

# தமிழ் கட்சிகளை தெரிவுக்குழு சந்திக்கும்

(கொழும்பு)

தமிழ் கட்சிகளுடன் மீண்டும் ஒரு சந்திப்பை நடாத்த தெரிவுக்குழு முடிவு செய்துள்ளதாக அதன் தலைவர் திரு. மங்களமுனசிங்க தெரிவித்துள்ளார்

அண்மையில் தெரிவுக்குழுவின் தலைவர் முன்வைத்த திட்டத்தை தமிழ்க் கட்சிகள் ஒட்டு மொத்தமாக நிராகரித்ததன்மூலம் தெரிவுக்குழுவின் நடவடிக்கையில் ஒரு பின்னடைவு ஏற்பட்டது.

இதையடுத்தே தெரிவுக்குழு தமிழ் கட்சிகளுடன் விரைவில் சந்திப்பொன்றை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (சி)

## 'பனை' நடுகை

(யாழ்ப்பாணம்)

மர நடுகை வாரத்தை யொட்டி பனை அபிவிருத்திச் சபை யாழ். மாநகர எல்லைக்குள் பனை நடுகைத் திட்டம் ஒன்றை ஆரம்பிக்க இருக்கிறது எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. (சு)

# உணவு முத்திரைக்கு பால்மா வழங்கமுடிவு

(கொழும்பு)

உணவுமுத்திரை பெறும் குடும்பங்களில் உள்ள குழந்தைகளுக்கு நிவாரணமாக பால்மா வழங்குவதற்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிர்மாண அமைச்சு தீர்மானித்துள்ளது

இத்திட்டம் இந்த வருடம் டிசம்பர் மாதம் 1-ந் திகதியில் நடைமுறைக்கு வருகின்றது. கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்துக்கு பின்பு பிறந்த குழந்தைகளே இவ் நிவாரணத்துக்கு தகுதி உடையவர்கள் என்றும் கூறப்பட்டுள்ளது

அரசாங்கத்திற்கு இந்தத் திட்டத்தினால் 12 கோடி 50 லட்சம் ரூபா செலவாகின்றது. வருடாந்தம் 2 லட்சம் குழந்தைகள் இதனால் பயனடைவார்கள். ஒரு குழந்தைக்கு குறைந்தது 50 ரூபா மாதாந்தம் செலவிடப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சு)

### தப்பியோடிய
(1ம் பக்கத் தொடர்ச்சி)

யோடிய படையினருக்கு பொதுமன்னிப்பு அளித்து இவர்களை மீண்டும் படையில் சேர்க்க முயற்சிக்கும்.

இதேவேளை இராணுவத்திலிருந்து தப்பியோடுவோர் தொகைதொடர்ந்தும் அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### மணலாறு
(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டனர்.

மணலாறில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய போர் யுக்திகள் ஆகியவை குறித்தும் அங்குள்ள பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடன் இவர்கள் ஆலோசனை நடத்தியுள்ளனர்.

கடந்த சில தினங்களாக வடக்கு-கிழக்கின் படை முகாம்கள் பலவற்றுக்கும் முப்படைத் தளபதிகளும் கூட்டுப்படைத் தளபதியும் அடிக்கடி விஜயம் செய்து வருவதும் தெரிந்ததே. (க-சி)

### அரசு அதிகாரிகள்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாடுகளும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக 218 முறைப்பாடுகளும் நீதி சேவையைச் சேராத எழுதுவினைஞர் தரத்திலான உத்தியோகத்தர்களுக்கு எதிராக 122 முறைப்பாடுகளும் விசாரிக்கப்பட்டுவருவதாகவும் அவ் அதிகாரி தெரிவித்தார்.

மற்றும் மருத்துவர்கள், காவல் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் போன்றோருக்கு எதிராகவும் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார். (க)

## சுட்டுக்கொலை

(லண்டன்)

அமெரிக்க கன்னியாஸ்திரிகள் ஐவர் லிபியா தீவிரவாதிகளால் லைபீரியாவில் சுட்டுக்கொலைப்பட்டுள்ளார்.

மேற்படி 5 அமெரிக்க கன்னியாஸ்திரிகளும் நிவாரணப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம் சுட்டுக்கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (க)

## சந்திரசேகர் தெரிவு

(புதுடில்லி)

முன்னாள் பிரதமர் திரு. சந்திரசேகர் சமாஜவாதி ஜனதாக் கட்சியின் புதிய தலைவராக நேற்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

மேற்படி கட்சியின் தலைவராகக் கடமையாற்றிய திரு. தேவிலால் சமாஜவாதி ஜனதாவின் பாராளுமன்றக் குழு தலைவராக நியமிக்கப்பட்டதையடுத்தே சந்திரசேகரின் தலைவர் தெரிவு இடம்பெற்றுள்ளது.

புதுடில்லியில் நேற்று நடைபெற்ற கட்சியின் தேசிய மாநாட்டிலேயே மேற்படி தெரிவு இடம்பெற்றுள்ளது. (க)

### குரன்போரில்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெருந்தொகையான அடியார்கள் வடக்கு உள்வீதியில் தீர்த்தம் வாங்கிக்கொண்டிருந்தபோது இப் பெண்மணியின் தாலிக்கொடி அபகரிக்கப்பட்டது. (72)

### கொலை ஆட்கடத்தல்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

காலத்தில் சிங்கள மக்கள் மீதும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான காலத்தில் தமிழ் மக்கள் மீதும் இக்கொடுமைகள் இழைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை மற்றொரு புறத்தில் இலங்கையின் பொருளாதார நிலை முன்பிருந்த நிலையைவிட மேம்பட்டுள்ளது. அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தில் அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷும், பில்கிளிங்டனும் குறிப்பிட்டதுபோல இலங்கையின் பொருளாதார நிலை மிகவும் மோசமானதல்ல எனவும் குறிப்பிட்டுள்ளனர். (சி)

### தமிழ் மக்களை
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்று வரும் யுத்தத்தினால் "இலங்கை ஒரு பாதுகாப்பான நாடு அல்ல" என்ற ஒரு பிரமையை வெளிநாட்டுச் செய்தியாளர்கள் வெளிநாடுகளில் தோற்றுவித்து வருகிறார்கள்.

வெளிநாட்டுச் செய்தியாளர்களின் பொறுப்பற்ற இந்நடவடிக்கையினால் புதிய வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு பெரிதும் தயக்கம் காட்டி வருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (க-சி-சு)

### பாதுகாப்பு
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களை மேற்கொள்வதற்காக தேவையேற்படின் அடிக்கடி மாநாடு கூடவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (சி)

### இயங்க முடியாத
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மர்கள் இருப்பதாகவும் இவற்றில் இரண்டு பழுதடைந்த நிலையில் இயங்கமுடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தற்போது இராணுவத்தினரின் தேவைக்கென பயன்படுத்தப்படும் போககுவரத்து விமானமான அவ்ரோ விமானத்திற்கு வெளிநாடுகளிலிருந்து பெருமளவு உதிரிப்பாகங்கள் பெருமளவு செலவில் தருவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (சி)

### இராணுவத்தின்
(1-ம்பக்கத் தொடர்ச்சி)

இராணுவத் தலைமையில் ஏற்பட்டுள்ள பதவிப் போட்டி, எதிரும்புதிருமான நடவடிக்கைகள் கீழ் மட்டத்தில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளதாம்.

இதனால் வடக்கு — கிழக்கு யுத்தத்திற்கான திறமையான திட்டங்களை தயாரிப்பதிலும் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளதுடன் படையினர் மத்தியில் ஒரு தொய்வுநிலை தொடர்வதாகவும் தெரிக்கப்பட்டுள்ளது.

### கடந்த மாதமே
(1ம் பக்கத் தொடர்ச்சி)

டர்கள். 260 க்கு மேற்பட்ட நவீனரக துப்பாக்கிகள் தமிழீழ விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளன. இவற்றுடன் 3 லட்சத்து 33 ஆயிரத்து 409 ரவைகளும். 260 கைக்குண்டுகளும், 579 பல்வேறு ரக எறிகணைகளும். இரண்டு நீரப் பிறப்பாக்கிகளும், இரண்டு வாகனங்களும் இராணுவத்தினரிடமிருந்து விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

**99 படையினர் பலி**

புலிகளின் தாக்குதலில் 99 ஸ்ரீலங்காப் படையினர் கொல்லப்பட்டனர். சென்றமாதம் கட்டைக்காடு ஆயுதக் களஞ்சியத்தை கைப்பற்றியதன் மூலம் அதிக ஆயுதங்களை விடுதலைப்புலிகள் கைப்பற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. அத்தோடு கட்டைக்காட்டில் உள்ள மூன்று மைல் நீள இராணுவ வேலியும். மினிமுகாம் ஒன்றும் விடுதலைப்புலிகளால் அழிக்கப்பட்டன. (சு)

### கொலைப்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் போஸ்டர்களில் சில பத்திரிகை விற்பனையாளர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்படும் என்ற வாசகங்கள் இருந்ததாகவும் கூறப்படுகின்றது.

இந்தப் போஸ்டர் ஒட்டிய சூத்திரதாரிகளைக் கண்டு பிடிப்பதற்கு நுவரெலியா நகரசபை ஐ. தே. கட்சி இன்று கூடுகிறது என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சு)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு நவம்பர் மாதம் 1ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office, Sri Lanka under Licence Number B / 10336 / 81